# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol : 01 | Issue : 67 | 4 Pages | 09.10.2023 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 Tiruppur

மலர் : 01 | இதழ் : 67 | 4 பக்கங்கள் | 09.10.2023 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதல் வெறுக்கத்தக்க செயல் ஆஸ்திரேலிய பிரதமர் கண்டனம்



சிட்னி, அக். 9

இஸ்ரேல்மீதுகாசாமுனையில்செயல்பட்டுவரும்ஹமாஸ்பயங்கரவாத குழு நடத்திய திடீர் ஏவுகணை தாக்குதலால் இஸ்ரேலில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த தாக்குதலுக்கு ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து காசா முனையில் ஹமாஸ் குழுவினரின் இருப்பிடங்கள் மீது இஸ்ரேல் பாதுகாப்புப்படை தாக்குதல் நடத்தி வருகிறது. இதுவரை இஸ்ரேல் ராணுவ தாக்குதலில், 400க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேல் ராணுவ செய்தி தொடர்பாளர் டேனியல் ஹகேரி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதல் வெறுக்கத்தக்கசெயல்என்று ஆஸ்திரேலியபிரதமர்அந்தோனிஅல்பானீஸ் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ளபதிவில், "இந்த நேரத்தில் இஸ்ரேலுடன் ஆஸ்திரேலியாதுணை நிற்கிறது. ஹமாஸ் அமைப்பின் பாரபட்சமற்ற, வெறுக்கத்தக்க தாக்குதலை கடுமையாக கண்டிக்கிறோம். தங்களை தற்காத்துக் கொள்ளும் உரிமை இஸ்ரேலுக்கு உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

## இஸ்ரேலில் ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் 10 நேபாள மாணவர்கள் உயிரிழப்பு



நேபாளம், அக். 9

இஸ்ரேல் மீது போர் தொடுத்துள்ள ஹமாஸ் அமைப்பு, வெற்றி இலக்கை அடையும் வரை தாக்குதல் தொடரும் என அறிவித்துள்ளது. அதே நேரத்தில், இஸ்ரேல்ராணுவ முகாம்களில் இருந்த ராணுவ உயர் அதிகாரிகள், வீரர்களை ஹமாஸ் அமைப்பினர் பிடித்து வைத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், ஏராளமான பொதுமக்களையும் பணயக் கைதிகளாக அடைத்து வைத்துள்ளனர். இதில், நேபாள நாட்டை சேர்ந்த 17 பேரை பணயக் கைதிகளாக ஹமாஸ் அமைப்பினர் பிடித்து வைத்துள்ளதாக இஸ்ரேலுக்கான நேபாள தூதரகம் தெரிவித்தது.

இந்தநிலையில், இஸ்ரேலில் ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் 10 நேபாள மாணவர்கள் உயிரிழந்துள்ளதாக இஸ்ரேலில் உள்ள நேபாள தூதரக அதிகாரி தெரிவித்துள்ளார். நேபாள மாணவர்கள் பலர் படித்துக்கொண்டே இஸ்ரேலில் வேலை செய்து வருகின்றனர். இந்த சூழ்நிலையில், இஸ்ரேலிய நகரங்கள் மீது ஹமாஸ் அமைப்பு நடத்திய ராக்கெட் தாக்குதலில் நேபாள மாணவர்கள் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## சுற்றுலா வந்த 2 இஸ்ரேலியர்களை சுட்டு கொன்ற எகிப்திய காவல் அதிகாரி



எகிப்த், அக். 9

மத்தியதரைக்கடல் பகுதியில் உள்ள அரபு நாடான எகிப்தின் முக்கிய சுற்றுலா நகரம் அலெக்சாண்ட்ரியா (Alexandria). கடற்கரை நகரமான அலெக்சாண்ட்ரியாவில் உள்ள பிரபலமான "போம்பே தூண்" (Pompey's Pillar) எனும் சுற்றுலா தலத்திற்கு வந்திருந்த ஒரு குழுவினரின் மீது அந்நாட்டு காவல்துறை அதிகாரி ஒருவர் திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தினார்.

இதில் 2 இஸ்ரேல் நாட்டை சேர்ந்தவர்களும் ஒரு எகிப்து நாட்டை சேர்ந்தவரும் உயிரிழந்தனர்; மற்றொரு இஸ்ரேல் நாட்டை சேர்ந்தவர் காயமடைந்தார். அவரை இஸ்ரேலுக்கு அனுப்பும் முயற்சியில் எகிப்தும் இஸ்ரேலும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன.

துப்பாக்கி சூடு நடத்திய அந்த அதிகாரி காவலில் எடுக்கப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்தப்பட்ட அந்த சுற்றுலா பகுதியை காவல்துறை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

சமூக வலைதளங்களில் இது குறித்து வெளியாகியுள்ள ஒரு வீடியோவில் சுடப்பட்ட இருவர் தரையில் கிடப்பதையும், அதில் ஒருவருக்கு தலையிலிருந்து ரத்தம் வெளியாவதும் காண முடிகிறது. சுற்றுலா குழுவை சேர்ந்த இஸ்ரேலி பெண்கள் "ஆம்புலன்ஸ், ஆம்புலன்ஸ்" என உரத்த குரலில் உதவி கேட்பதையும் காண முடிகிறது.

இஸ்ரேல் மீது பாலஸ்தீன ஹமாஸ் தாக்குதல் நடத்தியதனால், பதிலடியாக இஸ்ரேல் பாலஸ்தீன காசா பகுதிக்குள் பெரும் தாக்குதல் வேட்டையை நடத்தி வருகிறது. இப்பின்னணியில், எகிப்தில் இஸ்ரேலியர் சுட்டு கொல்லப்பட்டுள்ளது உலகெங்கும் உள்ள இஸ்ரேலியர்களிடையே பதட்டத்தை அதிகரித்துள்ளது.

# ஆசிய விளையாட்டு போட்டியில் 107 பதக்கங்கள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்திய அணிக்கு பாராட்டு



சென்னை. அக் .9

ஆசிய விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்ட இந்திய அணியை பாராட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் கூறி இருப்பதாவது:

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட இந்திய அணியினருக்கு எனது பாராட்டுகள்!

107 பதக்கங்களை அள்ளியதன் மூலமாக அபாரமான திறன், உறுதி மற்றும் அர்ப்பணிப்பை நமது விளையாட்டு வீரர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். தடகள சாம்பியன்கள், கூர்மிகு வில்வித்தையர்கள், சீற்றமிகு கபடி அணியினர், இறகுப் பந்து நட்சத்திரங்கள் என இந்தியாவின் பல தரப்பட்ட திறமையாளர்களும் பெரிதும் இத்தொடரில் மின்னியுள்ளனர்.

குறிப்பாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த நமது வீரர்களுக்குச் சிறப்பு பாராட்டுகளை உரித்தாக்குகிறேன். உங்களின் தனிச்சிறப்பான பங்களிப்பால் உலக அரங்கில் நமது மாநிலத்துக்குப் பெருமிதம் பொங்கச் செய்துள்ளீர்கள்.

இத்தகைய சிறப்பான பங்களிப்புடன் நமது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தியதற்காக உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். உங்களது முயற்சிகளும் சாதனைகளும் இங்கு இன்னும் பலரை ஊக்கப்படுத்தி வருகிறது. இந்திய அணி, வெகு சிறப்பு!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறி உள்ளார்.

# வெள்ளகோவில் நகராட்சியில் முடிவுற்ற திட்ட பணிகள்: அமைச்சர் சாமிநாதன் திறந்து வைத்தார்

திருப்பூர், அக். 9

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன் தலைமையில், திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சி, துரை ராமசாமி நகரில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட அரசு உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டடத்தை திறந்து வைத்தும், ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கால்நடை கிளை மருந்தக கட்டடத்தை திறந்து வைத்தும் என மொத்தம் ரூ.68 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்ட பணிகளை திறந்து வைத்தார்கள்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் உங்களுடைய ஆதரவோடு 2021 ஆம் ஆண்டு மே திங்கள் 7ம் நாள் முதலமைச்சராக பொறுப்பேற்றார்கள். அந்த காலகட்டம் என்பது ஒரு கொரோனா காலகட்டம் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியாத ஒரு சூழ்நிலையில் நாம் தவித்துக் கொண்டிருந்தோம் எனவே அந்த கட்டத்திலே முதலமைச்சராக பொறுப்பேற்ற தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதி எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் இந்த மாதம் 15 ஆம் தேதி பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1,000 என்கிற மகத்தான திட்டத்தைவழங்கியதுவரைதொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள்.

மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகக்கட்டுப்பட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பணிபுரியும் மகளிர், உயர்கல்வி பயிலும் மாணவியர், திருநங்கைகள் மற்றும் மாற்றுதிறனாளிகளுக்கு கட்டணமில்லாமலும், பேருந்துப் பயண அட்டை இல்லாமலும் பயணம் செய்ய முதலமைச்சர் துவக்கி வைத்தார்கள்.

புதுமைப்பெண் என்கிற திட்டத்தை துவக்கி வைத்தார்கள். தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் படிப்பு /பட்டயப்படிப்பு / பட்டப்படிப்பு/ தொழிற்கல்வி ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1000/ அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது.

வேளாண்மைத்துறையின் சார்பில் வேளாண்மைத்துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்து அதன் மூலம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு 4வது முறையாக பொறுப்பேற்ற போது வருமுன் காப்போம் திட்டத்தை கொண்டு வந்தார்கள். இத்திட்டத்தின் நோக்கம் மருத்துவமனையில் மட்டுமே மருந்துவர்கள் பணிபுரிவதோடு அல்லாமல் கிராமப்புறங்களுக்கு சென்று வயதானவர்கள், ஆதரவற்றோர்கள் மற்றும் மருத்துவமனைக்கு செல்ல முடியாதவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் சிறப்பாக பயன்பட்டு வருகிறது. நோய் ஆரம்ப கட்டத்தில் சரி செய்வதால் தான் இது வருமுன் காப்போம் திட்டம் என்றழைக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மருத்துவ முகாம்கள் வட்டார அளவில் நடைபெறும். ஒவ்வொரு முகாமிலும் மருத்துவர், மகப்பேறு மருத்துவர், குழந்தை நல மருத்துவர் உள்ளிட்ட மருத்துவர் குழுக்கள் மூலம் ஏழை எளிய மக்களுக்கு சிகிச்சை அளிக்க ஒரு சிறந்த



திட்டமாக உள்ளது. இந்த மருத்துவ முகாமில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் சர்க்கரை நோயாளிகள், உயர் இரத்த அழுத்தம் மற்றும் பல்வேறு நோய்களில் பாதிக்கப்பட்டவர்களின் இல்லத்திற்கே சென்று மருத்துவர் மற்றும் செவிலியர் ஆகியோர் சிகிச்சை அளிக்கின்றனர்.

இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 என்ற திட்டம் சாலை விபத்துக்களினால் ஏற்படும் உயிரிழப்புக்களை தடுக்கும் நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் வகுக்கப்பட்ட உன்னத திட்டம் இன்னுயிர் காப்போம் திட்டம். விபத்து நடந்த உடன் எவ்வித தாமதம் இல்லாமல் விபத்தில் சிக்கயவரை சரியான நேரத்தில் மருத்துவமனைக்கு கொண்டு செல்வதும் அவர்களுக்கு உடனடி சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்வதும் இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கான அவசர மருத்துவ சிகிச்சை செலவை தமிழ்நாடு அரசே மேற்கொள்ளும் வகையில் இன்னுயிர்காப்போம் நம்மைகாக்கும் 48 மணி நேரம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இன்றைய தினம் வெள்ளகோவில் நகராட்சி, துரை ராமசாமி நகரில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட அரசு உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டடத்தை திறந்து வைத்தும், ரூ.48.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கால்நடை கிளை மருந்தக கட்டடத்தை திறந்து வைத்தும் என மொத்தம் ரூ.68.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்ட பணிகளை திறந்து வைக்கப்பட்டது. இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்.மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் தியாகராஜன், உதவி இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) சக்திவேல் பாண்டியன், வெள்ளகோவில் நகர் மன்றத்தலைவர் கனியரசி முத்துக்குமார், வெள்ளகோவில் நகராட்சி ஆணையாளர் வெங்கடேஷ்வரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மதுரையில் உள்ள மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அமைச்சர் ஐ.பெரியசாமி பூரண குணமடைந்து இல்லம் திரும்பினார்.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் ஆவணத்தாங்கோட்டை ஊராட்சி மாளிகைபுஞ்சை கிராமத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் படித்துறை அமைக்கும் பணியினை அமைச்சர் மெய்யநாதன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்

# திருப்பூர் மாவட்ட கோர்ட்டு வளாகத்தில் பாலின உணர்திறன் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு



திருப்பூர்: அக்.9

தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் உத்தரவின் பேரிலும், திருப்பூர் முதன்மை மாவட்ட நீதிபதியும், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவருமான ஸ்வர்ணம் ஜெ.நடராஜன் வழிகாட்டுதலின் பேரில், திருப்பூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, திருப்பூர் மாவட்ட நீதிமன்ற பாலின உணர்திறன்குழு மற்றும் நிறங்கள் அமைப்பு சார்பில் நீதிமன்ற பணியாளர்களுக்கு பாலின உணர்திறன் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு மாவட்ட கோர்ட்டு வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் திருப்பூர் மாவட்ட கூடுதல் சார்பு நீதிபதி மேகலா மைதிலி வரவேற்றார். மாவட்ட விரைவு மகிளா நீதிபதி பாலு முன்னிலை வகித்து பேசுகையில், சமுதாயத்தில் ஆண், பெண் இருபாலருக்கும் வழங்கப்படும் சமத்துவம் மூன்றாம் பாலினத்தவருக்கும் நாம் வழங்க வேண்டும். அவர்களின் உணர்வுகளை புரிந்துகொள்வதோடு மட்டுமல்லாமல் அவர்களை சக மனிதர்கள் போல் நடத்த வேண்டும் என்றார். மாவட்ட குடும்பநல நீதிபதியும், மாவட்ட நீதிமன்ற பாலின உணர்திறன்குழு தலைவருமான சுகந்தி மற்றும் கூடுதல் மகிளா நீதித்துறை நடுவர் கார்த்திகேயன்ஆகியோர்வாழ்த்துரை வழங்கினர். நிறங்கள் அமைப்பின் இணை நிறுவனர்சிவக்குமார், ஒருங்கிணைப்பாளர்கள் டெல்பினா, நவீன்குமார் ஆகியோர் 3ம் பாலினத்தவர்களில் உள்ள வேறுபாடுகள் குறித்தும், அவர்கள் சமுதாயத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் உள்பட பல விவரங்கள் குறித்து விளக்கினர்.முடிவில் நீதித்துறை நடுவர் முருகேசன் நன்றி கூறினார். இதில் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாய நீதிபதி ஸ்ரீகுமார், தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் புகழேந்தி, வழக்கறிஞர்கள், கோர்ட்டு பணியாளர்கள் உள்பட 180க்கும் மேற்பட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# மசாஜ் சென்டர் பெண்களை கத்தியால் தாக்கிய 4 வாலிபர்களுக்கு தலா 7 ஆண்டு சிறை: திருப்பூர் மாவட்ட மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு

திருப்பூர், அக். 9

திருப்பூர் மங்கலம் ரோடு வெங்கடாசலபுரம் 3வது வீதியில் உள்ள மசாஜ் சென்டரில் கடந்த 1122022 அன்று மாலை 4 பேர் கொண்ட கும்பல் புகுந்து அங்கிருந்த பெண் ஊழியர்களை கத்தியால் தாக்கி பணம் கேட்டு கொலைமிரட்டல் விடுத்தனர். இதுகுறித்து மத்திய போலீசார் வழக்குப்பதிவு செய்து திருப்பூர் ஆண்டிப்பாளையத்தை சேர்ந்த சையது முகமது இக்ரம் (வயது 26), தெற்கு தோட்டத்தை சேர்ந்த கார்த்திக் (27), கே.வி.ஆர்.நகரை சேர்ந்த காளிஸ்வரன் (27), ஆனந்த் (26) ஆகியோரை கைது செய்து சிறையில் அடைத்தனர். இதுதொடர்பான வழக்கு விசாரணை திருப்பூர் மாவட்ட மகளிர் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்த வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டது. சையது முகமது இக்ரம், கார்த்திக், காளிஸ்வரன், ஆனந்த் ஆகிய 4 பேருக்கு தலா 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை, ரூ.15 ஆயிரம் அபராதம் விதித்து நீதிபதி பாலு தீர்ப்பளித்தார். இந்த வழக்கில் அரசு வக்கீல் ஜமீலா பானு ஆஜராகி வாதாடினார். சிறப்பாக செயல்பட்ட மத்திய போலீஸ் இன்ஸ்பெக்டர் பத்ரா, சிறந்த முறையில் சாட்சிகளை விரைந்து ஆஜர் செய்த இன்ஸ்பெக்டர் பதுர்நிஷா பேகம் மற்றும் போலீசாரை திருப்பூர் மாநகரபோலீஸ்கமிஷனர் பிரவீன்குமார் அபினபு பாராட்டினார்.

# புகையிலை பொருட்கள் விற்பனை செய்த 43 கடைகள் மூடல்: உணவு பாதுகாப்புத்துறை அதிரடி நடவடிக்கை



திருப்பூர், அக். 9

திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் உத்தரவுப்படி, திருப்பூர் மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை நியமன அதிகாரி விஜயலலிதாம்பிகை தலைமையில் உணவு பாதுகாப்பு அலுவலர் ரவி மற்றும் மத்திய போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் கண்ணன் ஆகியோர் கொண்ட குழுவினர் திருப்பூர் ஏ.பி.டி.ரோடு, மங்கலம் ரோடு, முருகம்பாளையம், கே.வி.ஆர்.நகர், செல்லம்நகர், ஆண்டிப்பாளையம் ஆகிய பகுதிகளில் தீவிர திடீர் ஆய்வு மேற்கொண்டனர். இதில் 16 கடைகளில் ஆய்வு செய்ததில் அவற்றில் 5 கடைகளில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்வது கண்டறியப்பட்டு அந்த கடைகளுக்கு அபராதம் விதித்து மூடப்பட்டன.திருப்பூர் மாவட்டத்தில் தொடர்ந்து இது போன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி கடந்த மாதம் முதல் இதுவரை 234 கடைகளில் ஆய்வு செய்யப்பட்டு, அதில் 70 கடைகளில் புகையிலை பொருட்கள் விற்பனை செய்தது கண்டறியப்பட்டது. முதல்முறையாக புகையிலை பொருட்கள் விற்பனை செய்த கடை உரிமையாளர்களுக்கு தலா ரூ.5 ஆயிரம், 2வது முறை குற்றத்துக்கு ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்ப ட்டது. அந்த வகையில் 43 கடைகள் மூடப்பட்டன. புகையிலை பொருட்கள் தொடர்பான புகார்களை 94440 42322 என்ற எண்ணில் புகார் தெரிவிக்கலாம் என்று அறிவித்துள்ளனர்.

# வெள்ளகோவில் அய்யப்ப சாமி கோவிலில் ராகு கேது பெயர்ச்சி வழிபாடு

வெள்ளகோவில், அக். 9

வெள்ளகோவில் தர்ம சாஸ்தா அய்யப்ப சாமி கோவிலில் இன்று ராகு கேது பெயர்ச்சியை முன்னிட்டு சிறப்பு ஹோம வழிபாடு நடைபெற உள்ளது.

விநாயகர் வழிபாட்டுடன் தொடங்கி ராகு கேது காயத்ரி ஹோமம், அஷ்டாபிஷேகம், நாகராஜாவுக்கு கலச அபிஷேகம் அதை தொடர்ந்து மகா தீபாராதனை, அன்னதானம் நடைபெற உள்ளது.

இதே போல் வெள்ள கோவில் எல்.கே.சி. நகர் புற்றுக்கண் ஆனந்த விநாயகர் கோவிலில் ராகு கேது பெயர்ச்சி சிறப்பு ஹோம வழிபாடு, அன்னதானம் நடைபெற உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினர் செய்துள்ளனர்.

# திருமூர்த்தி நகர் பெருமாள் கோவிலில் மழை வேண்டி பொங்கல் வைத்து வழிபாடு



உடுமலை, அக். 9

உடுமலை திருமூர்த்தி நகர் கிராமத்தில் அழகு திருமலை ராய பெருமாள் கோவில் உள்ளது.

இங்கு ஆண்டு தோறும் புரட்டாசி மாதங்களில் சனிக்கிழமை உடுமலையை சுற்றியுள்ள கிராம மக்கள் சுவாமிக்கு அபிஷேகம், சிறப்பு அலங்காரம், பூஜைகள் மற்றும் தீபாராதனை செய்து வழிபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் தென் மேற்கு பருவ மழை பொய்த்து போன நிலையில், வடகிழக்கு பருவ மழை நன்றாக பெய்து விவசாயம் செழிக்க வேண்டி தளி தென்னை வளர்ச்சி வாரியம் சார்பில் அழகு திருமலை ராய பெருமாள் கோவிலில் பொங்கல் வைத்தும் அன்னதானம் வழங்கியும் வருண ஜெபம் மற்றும் சிறப்பு பூஜை நடை பெற்றது.இந்த நிகழ்ச்சியில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் மேலாளர் ரகோத்துமன் தலைமை தாங்கினார்.

இதில் வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# உடுமலை வனப்பகுதி ஏழுமலையான் கோவிலில் குவிந்த பக்தர்கள்

உடுமலை, அக். 9

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே ஆனை மலை புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பழமையான ஏழுமலையான்கோவில்அமைந்துள்ளது. அடர்ந்த வனப்பகுதியில் கரடு முரடான மலைப்பாதையில் அமைந்துள்ள இந்த கோவிலுக்கு ஆண்டுதோறும் புரட்டாசி மாத சனிக்கிழமைகளில் மட்டும் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். கேரள மாநிலம் மற்றும் தமிழகத்தின் பல் வேறு மாவட்டங்களில் இருந்து புரட்டாசி சனிக்கிழமை அன்று ஏராளமான பக்தர்கள் இங்கு வந்து ஏழுமலையானை தரிசனம் செய்து செய்கின்றனர்.

மூன்றாவது சனிக்கிழமையான நேற்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் காலை முதல் ஏழுமலையானை தரிசிக்க கோவிலுக்கு வந்தனர். அடர்ந்த வனப்பகுதியில் 7 கிலோமீட்டர் தூரம் 7 மலைகளைகடந்து சென்று வழிபட்டனர். பக்தர்கள் 2 கிலோமீட்டர் தூரத்திற்கு வரிசையில் காத்திருந்து ஏழுமலையானைதரிசித்தனர். மலை மேல் உள்ள வற்றாத சுனையில் தீர்த்தம் எடுத்து அவுல் பச்சரிசி, தேங்காய், ஆகிய வற்றை சாமிக்கு படைத்து வழிபட்டனர் .பக்தர்கள் வருகையை முன்னிட்டு மலையடிவாரம் முதல் கோவில் வரை வனத்துறையினர் மற்றும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். மேலும் வனப்பகுதிக்குள் பிளாஸ்டிக் பொருட்களைக் கொண்டு செல்ல தடை விதித்து ஆய்வு மேற்கொண்டனர். மலைஅடிவாரத்தில் சிறப்பு மருத்துவ முகாம் அமைக்கப்பட்டு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

# உடுமலையில் டிவைடரால் போக்குவரத்து நெரிசலில் சிக்கும் வாகன ஓட்டிகள்



உடுமலை, அக். 9

உடுமலையில் இருந்து பல்வேறு கிராமங்கள் வழியாக திருமூர்த்தி மலைக்கு செல்வதற்கு பிரதான சாலை அமைக்கப்பட்டு உள்ளது.இதன் மூலமாக சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள், விவசாயிகள்,வாகன ஓட்டிகள் பயனடைந்து வருகின்றனர். இதில் உடுமலை திருமூர்த்தி மலை சாலையில் யூனியன் ஆபீஸ் பஸ் நிலையத்தின் அருகே பாதாள சாக்கடை தொட்டி சேதம் அடைந்தது. அதைத் தொடர்ந்து அந்த தொட்டி சீரமைக்கப்பட்டது.இதற்காக அதன் இருபுறங்களிலும் சாலையின் பகுதி அளவிற்கு ஆக்கிரமிப்புசெய்து டிவைடர்கள் வைக்கப்பட்டு உள்ளது.

இந்த சூழலில் நேற்று அந்தப் பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் நிலவியது. டிவைடர் இருந்த காரணத்தினால் வாகன ஓட்டிகளுக்குள் தடுமாற்றம் ஏற்பட்டது. அப்போது உடுமலை நோக்கி சென்ற மூன்று கார்கள் ஒன்றன் மீது ஒன்று மோதி விபத்து ஏற்பட்டது.வாகனங்கள் மிதமான வேகத்தில் சென்றதால் யாருக்கும் அசம்பாவிதம் ஏற்படவில்லை. ஆனால் கார்கள் சேதம் அடைந்தது. இது குறித்து வாகன ஓட்டிகள் கூறுகையில், இந்த சாலையில் பாதாள சாக்கடை தொட்டிகள் சேதம் அடைவது தொடர்கதையாக உள்ளது. ஒரு முறை அமைக்கும் போதே அவற்றை தரமானதாக அமைத்தால் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாது. கட்டுமானத்திற்காக வைக்கப்பட்ட டிவைடரால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்து நிகழ்ந்தது. இதனால்வாகனஓட்டிகளுக்கு பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. பிரதான சாலைகளில் மேற்கொள்ளப்படும் பணிகளை விரைந்து முடித்தால் இது போன்ற விபத்துக்கள் நிகழாது என்று தெரிவித்தனர்.

# அஞ்சல் வார விழா இன்று தொடக்கம்

திருப்பூர்,அக். 8

வருகிற 9ந் தேதி உலக அஞ்சல் தினம், 10ந் தேதி, அஞ்சல் சமூக வளர்ச்சி தினம், 11ந் தேதி அஞ்சல் தலை சேமிப்பு தினம், 12ந் தேதி, தபால்கள் மற்றும் பார்சல்களுக்கான தினம், 13ந் தேதி, சாமானியர் நல் வாழ்வு தினம் ஆகியவை கொண்டாடப்படுகிறது. இவை, திருப்பூர் அஞ்சல் கோட்ட அளவிலும், சிறப்பாக கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளது. இது குறித்து திருப்பூர் அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் விஜயதனசேகர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தற்போது, மாநில அரசின் சார்பில் பெண்களுக்கான உரிமைத்தொகை வழங்கப்படுகிறது.இவை அஞ்சலக வங்கிக்கணக்கு வாயிலாகவும் வழங்கப்படுவதால், அஞ்சலகங்களில் புதிய கணக்குதுவக்கி பயன் பெறலாம்.இதுதவிர, 7.5 சதவீத வட்டி சலுகையில், பிரத்யேக மகளிர் கணக்கு, 2025 மே 31 வரை துவக்கப்படும். 10 வயது பெண் குழந்தைகளுக்கு 8 சதவீதம் வட்டி வழங்கும் வகையிலும், ஆண் குழந்தைகளுக்கு, 7.1 சதவீதம் வட்டி வழங்கும் வகையிலும் சேமிப்பு கணக்கு துவக்கலாம்.

ஏ.டி.எம்., இன்டர்நெட் பேங்கிங், வசதிகளும் உள்ளன. மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள அஞ்சலகங்களை தொடர்பு கொள்ளலாம். www.indiapost.gov.in என்ற இணையதள முகவரியிலும் தகவல் பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தகவல் உரிமை அறியும் சட்ட விழிப்புணர்வு போட்டி

தாராபுரம்:, அக். 9

தாராபுரம் காவல்துறை மற்றும் விழுதுகள் அமைப்புசார்பில்தகவல்உரிமை அறியும் சட்டம் குறித்து விழிப்புணர்வு வேக நடை போட்டி நடைபெற்றது.

போட்டியை தாராபுரம் காவல் துணை கண்காணிப்பாளர் கலையரசன் மற்றும் நீதிபதி தர்ம பிரபு ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். இதில் பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். வேக நடை போட்டி தாராபுரம் காவல் நிலையம் முன்பு புறப்பட்டு பெரிய கடை வீதி ,டி.எஸ். கார்னர், பழைய காவல் நிலைய வீதி, கொழிஞ்சி வாடி சாலை வழியாக மீண்டும் காவல் நிலையம் வந்தடைந்தது. நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு காவல்துறை கண்காணிப்பாளர் கலையரசன் மற்றும் நீதிபதி தர்ம பிரபு மணிகண்டன், இன்ஸ்பெக்டர் மணிகண்டன் ஆகியோர் பரிசு வழங்கினர்.

# உடுமலை திருப்பதி பெருமாள் கோவிலில் புரட்டாசி வழிபாடு



உடுமலை, அக். 9

திருப்பூர் மாவட்டம் உடுமலை தளிரோட்டில் உள்ள ஸ்ரீ வெங்கடேச பெருமாள் திருப்பதி கோவிலில் ஒவ்வொரு சனிக்கிழமை சிறப்பு பூஜைகள் நடைபெறுவது வழக்கம். இந்நிலையில் புரட்டாசி மாதம் மூன்றாவது சனிக்கிழமையை முன்னிட்டு வெங்கடேச பெருமாளுக்கு தங்க கவசம் அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடந்தன.

இதில் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு நீண்ட வரிசையில் நின்று வெங்கடேச பெருமாளை வழிபட்டனர்.

உடுமலை ,மடத்துக்குளம் ,பொள்ளாச்சி சுற்று வட்டாரபகுதியில்இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்டோர்கலந்து கொண்டனர் .மேலும் பக்தர்களுக்கு லட்டு ,துளசி தீர்த்தம் பிரசாதமாக வழங்கப்பட்டது.

புரட்டாசி மூன்றாவது சனிக்கிழமை சிறப்பு பூஜைகளுக்கான ஏற்பாடுகளை உடுமலை திருப்பதி ஸ்ரீ பாலாஜி சாரிடபிள் டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் ராமகிருஷ்ணன் ,அறங்காவலர் மற்றும் திருப்பணி குழுவினர் செய்திருந்தனர்.

# வேளாண் அலுவலகங்களில் மானியத்துடன் பாரம்பரிய நெல் ரகம் விற்பனை

திருப்பூர், அக். 9

தமிழ்நாட்டில் பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாத்து மீட்டெடுக்கவும், அதன் மருத்துவ முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மாநில வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நெல் ஜெயராமன் மரபுசார் நெல் ரகங்களின் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் பாரம்பரிய நெல் விதைகள், வேளாண் மைத்துறை மூலமாக வினியோகம் செய்யப்படுகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் காங்கயம், தாராபுரம், மடத்துக்குளம், உடுமலை, வெள்ளகோவில் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் பாரம்பரிய நெல் ரகமான தூயமல்லி ரகம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த ரகங்களின் விற்பனை விலை ஒரு கிலோ ரூ.50 ஆகும். விவசாயிகளுக்கு 50 சதவீத அரசு மானியத்தில் ஒரு கிலோ ரூ.25க்கு வழங்கப்படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 20 கிலோ வரை அரசு மானியத்தில் விதை நெல் வழங்கப்படும். எனவே சம்பா பருவ சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், அருகில் உள்ள வேளாண் அலுவலகங்களில் பாரம்பரிய நெல் விதைகளை வாங்கிபயன் பெறலாம்.

இந்த தகவலை வேளாண் இணை இயக்குனர் மாரியப்பன் தெரிவித்துள்ளார்.

# 31ந்தேதிக்குள் சொத்து வரி செலுத்தினால் 5 சதவீதம் ஊக்கத்தொகை: காங்கயம் நகராட்சி அறிவிப்பு




காங்கயம், அக். 9

காங்கயம் நகராட்சியில் 2023,24 ம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டுக்கான சொத்துவரியை அக்டோபர் 31 ந் தேதிக்குள் செலுத்தி 5 சதவீதம் ஊக்கத்தொகை பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து காங்கயம் நகராட்சி ஆணையர் கு. கனிராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: காங்கயம் நகராட்சியில் வசிப்பவர்கள் 2023 24 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டுக்கான சொத்து வரியை வரும் அக்டோபர் 31 ந் தேதிக்குள் செலுத்தினால் 5 சதவீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும். இந்த வாய்ப்பை பயன்படுத்தி பொதுமக்கள் சொத்து வரியை செலுத்தி கொள்ளலாம். இதே போல நகராட்சிக்கு செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணம், இதர வரியினங்களையும் செலுத்தி நகராட்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# அரசு இடத்தில் ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்த கோரிக்கை

திருப்போரூர், அக்.9

திருப்போரூர் ரவுண்டனா அருகில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடம் உள்ளது. இந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டுமான பணி நடைபெறுவதாக குற்றச்சாட்டு எழுந்து உள்ளது. இந்நிலையில் அரசு இடத்தில் கட்டுமான பணிகளை நிறுத்தக்கோரி அ.தி.மு.க, பா.ம.க., விடுதலை சிறுத்தைகள், தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் அப்பகுதிக்கு சென்று கட்சி கொடிகளை நட்டு திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களிடம் திருப்போரூர் இன்ஸ்பெக்டர் வெங்கடேசன் மற்றும் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர். இது குறித்து வருவாய் துறைக்கு தகவல் தெரிவித்து அதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார். இதைத்தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. புதிய நிர்வாகிகள் நியமனம்

நாகர்கோவில், அக். 9

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலா ளராக தளவாய் சுந்தரம் எம்.எல்.ஏ. நிய மிக்கப்பட் டார். இதைத் தொடர்ந்து கன்னியாகு மரி கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. புதிய நிர்வாகி களை அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் எதிர்க்கட் சித்தலைவருமான எடப்பாடி பழனிசாமி நிய மினம் செய்துள்ளார்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட துணை செயலா ளர் சுகுமாரன் நியமிக்கப்பட்டுள் ளார். அண்ணா தொழிற் சங்க செயலாளர் வைகுண்ட மணி, விவசாய பிரிவு மாவட்ட செய லாளர் பாலமு ருகன், சிறு பான்மை மயினர் நலப்பி ரிவு மாவட்ட செயலாளர் ரசாக், அமைப்பு சாரா ஓட்டுநர் மாவட்ட செய லாளர் ஆறுமுகராஜா, வர்த்தக அணி மாவட்ட செயலாளர்சந்திரன், கலை பிரிவு மாவட்ட செயலா ளர் சாம்ராஜ், டாஸ்மாக் அண்ணா தொழிற்சங்க மாவட்ட செயலாளர்மணி கண்டன் ஆகியோர் நிய மனம் செய்யப்பட் டுள்ளனர்.



தோவாளை தெற்கு ஒன்றிய செயலாளராக முத்துக்குமார், அகஸ்தீஸ்வ ரம் வடக்கு ஒன் றிய செயலாளர் ஜெஸீம், தெற்கு ஒன்றிய செயலாளர் தினேஷ்குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள் ளனர். பொதுக்குழு உறுப்பி னராக மகாராஜா பிள்ளை, ராஜாக்கமங்கலம் எம். ஜி.ஆர். இளைஞர் அணி ஒன்றிய செயலாளராகசிவ கந்தன், ஆரல்வாய்மொழி பேரூராட்சி செயலாளராக சுடலையாண்டி, தென்தா மரைகுளம் பேரூராட்சி செயலாளராக டானியல், மாநில மகளிர் அணி துணை செயலாளராக ராணி, மாநில விவசாய பிரிவு துணை செயலாளர் தாணு பிள்ளை, மாநில இலக்கிய அணி இணை செயலாளராக சந்துரு என்ற ஜெயச்சந்திரன் ஆகி யோர் நியமிக்கப்பட் டுள் ளனர். நாகர்கோவில் மாநகராட்சி வடக்கு பகுதி செய லாளராக ஸ்ரீலிஜா நிய மிக்கப்பட்டுள்ளார். வடக்கு பகுதியாளராக நியமிக்கப் பட்டுள்ள ஸ்ரீலிஜாதமிழகத்திலேயே அ.தி.மு.க.வில் முதல் பகுதி செயலாளர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# பீளமேட்டில் சம்பள பாக்கி கேட்ட பெண்ணுக்கு பாலியல் தொல்லை

பீளமேடு, அக். 9

கோவை பொள்ளாச்சி பாலக்காடு ரோட்டை சேர்ந்த 40 வயது பெண் மணி, பீளமேடு போலீசில் அளித்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது:

நான் பீளமேடு பகுதி யில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் அதிகாரி யாக வேலைக்கு சேர்ந் தேன். அப்போது எனக்கு மாதந்தோறும் ரூ.70 ஆயி ரம் வீதம் சம்பளம் நிர்ண யிக்கப்பட்டது.

நான்அந்தநிறுவனத்தில் கடந்த 2021 ஆகஸ்டு மாதம் முதல் 2022 செப் டம்பர் மாதம் வரை வேலை பார்த்தேன். இந்த நிலையில் அவர்கள் எனக்கு கடைசி 4 மாதங் கள் சம்பளம் தரவில்லை.

எனவே நான் அந்த நிறு வன மேலாளர்கள் சுதாகர், சின்னகாளை ஆகியோரி டம் நிலுவையில் உள்ள சம்பளப்பாக்கியை வழங் கும்படி கேட்டேன். அப் போது அவர்கள் பாலியல் உல்லாசத்துக்கு இணங்கி னால்தான் சம்பளப் பாக்கி தருவோம் என்று மிரட்டி னர்.

இதற்கு நான் ஒப்புக் கொள்ளவில்லை. எனவே ஆத்திரம் அடைந்த 2 பேரும் என்னை தகாத வார்த்தைகள் பேசி பாலி யல் ரீதியாக துன்புறுத்தினர்.

எனவே போலீசார் இது தொடர்பாக விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்எனகூறப்பட்டு உள்ளது.

புகாரின்பேரில் போலீ சார் வழக்குப்பதிவு செய்து சம்பந்தப்பட்ட தனியார் நிறுவன மேலாளர்கள் சுதாகர் மற்றும் சின்ன காளை ஆகிய 2 பேருக்கும் எதிராக 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

# கடலூர் திருப்பாதிரிப்புலியூரில் லாரி தீப்பிடித்து எரிந்தது

கடலூர், அக். 9

கடலூர் திருப்பா திரிப்பு லியூர் நத்தவெளி சாலை யில் குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு விசாரணை வழக்கு தொடர்பாக பிடிக்கப்பட்ட லாரி ஒன்று பல மாதங்களாக நின்று கொண்டிருந்தது. இந்த நிலையில் இன்று காலை நின்று கொண்டிருந்த லாரி திடீரென்று தீப்பிடித்து எரிய தொடங்கியது. இதன் காரணமாக அப்பகு தியில் புகை மண்டலமாக காட்சியளித்தது. இதனை



பார்த்த பொதுமக்கள் கடும் அதிர்ச்சடைந்து உட னடியாக மாநகராட்சி கவுன்சிலர் சாய்துனிஷா சலீம் மற்றும் போலீசா ருக்கு தகவல் கொடுத்த னர்.

பின்னர்தீயை அணைக்க முயற்சி செய்த நிலையில், தகவல் அறிந்த தீயணைப் புத் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து எரிந்து கொண்டி ருந்த லாரியின் தீயை அணைத்தனர்.

உரிய நேரத்தில் தீயை அணைத்ததால் பெரும் விபத்து தவிர்க்கப்பட் டது. இது குறித்து திருப் பாதி ரிப்புலியூர் போலீசார் விசாரணை நடத்தி வரு கின்றனர். இந்த சம்பவத் தால்அப்பகுதியில்பெரும் பரபரப்பாக காணப் பட்டது.

# தருமபுரி மாவட்டத்தில் ஒரே கிராமத்தைச் சேர்ந்த 7 பேர் பலியாகினர்: சோகத்தில் மூழ்கிய உறவினர்கள்

அரூர், அக். 9

தருமபுரி மாவட்டம் அரூர் டி.அம்மாபேட்டை சேர்ந்த இளைஞர்கள் 25க்கும் மேற்பட்டோர், ஓசூர், கர்நாடக பகுதிக ளில் உள்ள பட்டாசு குடோன்களில் வேலை செய்வதற்காக சென்று உள் ளனர். இதில் 15 இளைஞர் கள் ஒரு பகுதிக்கு சென் றுள்ளனர்.

இதில் 10 இளைஞர்கள் தமிழ்நாடு கர்நாடக எல் லையில் உள்ள அத்திப்பள் ளியில் உள்ள பட்டாசு குடோனில் வேலை செய்து வந்துள்ளனர். இந் நிலையில் பட்டாசு குடோ னுக்கு தேவையான பட் டாசுகள் கன்டெய்னர் லாரி மூலம் வந்துள்ளது. இதனை இறக்கும் பணி யில் குடோனில் வேலை செய்த 20க்கும் மேற்பட்ட



ஊழியர்கள் ஈடுபட்டுள்ள னர். அப்பொழுது எதிர்பா ராத விதமாக பட்டாசு குடோனில் தீ விபத்து ஏற் பட்டது. இந்த தீ முழுவது மாக பரவி குடோனில் இருந்த பட்டாசுகள் முழு வதும் வெடித்து சிதறியது.

அப்போது வெளியில் வேலை செய்திருந்த லோகேஷ் மற்றும் பீமா ராவ் இருவரும் தப்பி வெளியில் வந்துள்ளனர். ஆனால் குடோனுக்கு ள்ளாக இருந்த மற்றவர் கள் விபத்தில் சிக்கினர். இந்த நிலையில் இந்த விபத்தில் இதுவரை 14 பேர் உடல் கருகி உயிரிழந் துள்ளனர்.

இதில் தருமபுரி மாவட் டம் அரூர் அடுத்த டி.அம் மாபேட்டையை சேர்ந்த 8 பேர் உடல் கருகி உயிரிழந் துள்ளனர். ஒரே கிராமத் தைச் சார்ந்த வேடப்பன், இளம்பரிதி, ஆதிக்கேச வன், விஜயராகவன், ஆகாஷ், கிரி, முனிவேல் உள்ளிட்ட 7 வாலிபர்கள் உயிரிழந்தனர். இத னால் டி.அம்மாபேட்டை கிரா மம் முழுவதும் சோகத் தில் மூழ்கியுள்ளது. மேலும் இறந்தவர்களின் வீட்டு அருகே உறவினர் கள் சூழ்ந்து கதறி அழுத னர். இந்த காட்சி பார்ப்ப வர்கள் நெஞ்சை உருக்கும் நிலையில் இருந்தது. மேலும் ஒரு கிராமத்தைச் சேர்ந்த 7 இளைஞர்கள் பட்டாசு வெடிவிபத்தில் சிக்கி உயிரிழந்த சம்பவம் இந்த பகுதி முழுவதும் பெரும் சோகத்தை ஏற்ப டுத்தியுள்ளது.

# உலகம்பட்டி தேவாலயத்தில் அதிசய நீரூற்று



தாடிக்கொம்பு, அக். 9

தாடிக்கொம்பு அருகே உலகம்பட்டி வடக்கியூர் கிராமத்தில் நூற்றாண்டு பழமை வாய்ந்த புனித சந் தியாகப்பர் தேவாலயம் அமைந்துள்ளது.

இந்த ஆலயத்தில் ஒவ் வொரு மாதத்தின் 2ம் புதன்கிழமை மாலையில் சிறப்பு நவநாள் திருப்பலியும் அன்னதான மும் நடைபெற்று வருகி றது. இதற்கிடையே இன்று தேதி காலை சுமார் 7 மணி அளவில் கோவி லுக்கு வந்த பக்தர்கள், கோவிலுக்கு முன்பாக மெழுகுவர்த்தி வைக்கும் இடத்தில் அருகே புதிதாக நீரூற்று வந்தபடி இருந் தது. இதனை அடுத்து அந்த ஊரைச் சேர்ந்த முக் கியஸ்தர்களிடம் தகவல் கொடுத்தனர்.

இத்தகவல் சுற்றுப் பகுதி யில் பரவியதை அடுத்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்து ஊற்று வந்த இடத்தை பார்வை யிட்டு வணங்கி செல்கின் றனர்.

# பவானி அரசு சித்த மருத்துவ பிரிவில் வாழை இலைமண் குளியல் தொடக்கம்

பவானி, அக். 9

பவானி அந்தியூர் மெயின் ரோட்டில் அரசு தலைமை மருத்துவமனை செயல் பட்டு வருகிறது.

இந்த மருத்துவமனைக்கு பவானி சுற்றுவட்டார பகுதி யில் உள்ள கிராம பொதுமக் கள் ஏராளமானோர் வருகை தந்து பல்வேறு வகையான உடல்நல குறைவுகளுக்கு மருத்துவம் பார்த்து செல் கின்றனர். அதேபோல் இந்த மருத்து வமனையில் நுழைவாயில் பகுதியில்



அரசு சித்த மருத்துவ பிரிவு உள்ளது. டாக்டர்.கண்ணு சாமி மூலம் தினசரி இங்கு வரும் நோயா ளிகளுக்கு வெளிப்புற சிகிச்சையில் நீராவி குளியல், சிரசு எண்ணெய், புற வளையம், வர்மக்கலை, தொக்கணம் (மசாஜ்) போன்ற சிகிச்சைகள் செய் யப்பட்டு வருகி றது. இந்த சிகிச் சைகளைஉள்ளூர் மற்றும் வெளியூர் பகுதிகளில் இருந்து ஏராள மான நோயாளிகள் பலர் இதுவரை பயன்படுத்தி குணமடைந்து வருகின்ற னர். இந்நிலையில் அரசு சித்த மருத்துவ பிரிவில் தற்போது வாழை இலை குளியல் மற்றும் மண் குளி யல் சிகிச்சை தொடங்கப் பட்டு உள்ளது. இந்த சிகிச் சைகளை பவானி சுற்றுவட்டார பகுதியில் உள்ள ஏழை, எளிய பொது மக்கள் மற்றும் வெளியூரில் உள்ள நோயாளிகள் மருத்து வமனைக்கு வருகை தந்து இந்த சிகிச்சைகள் மூலம் பயன்பெற வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# பெருமாள் கோவில்களில் சிறப்பு பூஜைகள்



கிருஷ்ணகிரி, அக். 9

புரட்டாசி மாதம் பெரு மாளுக்கு உகந்த மாதமா கும். இந்த மாதத்தில் பக் தர்கள் விரதம் இருந்து பெருமாளை வழிபடுவது வழக்கம். இந்த மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் பெருமாள் கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெ றுகின்றன. இந்த ஆண்டு புரட்டாசி மாதம் கடந்த 18ம் தேதி தொடங்கியது. நேற்று புரட்டாசி மாதத் தின் மூன்றாவது சனிக்கிழ மையை (நடு சனி) முன் னிட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து பெரு மாள் கோயில்களிலும் சிறப்பு பூஜைகள் நடந்தன.

அதன்படி, கிருஷ்ணகிரி அடுத்த கணவாய்ப்பட்டி யில் உள்ள பிரசித்தி பெற்ற பெருமாள் கோயிலில் நேற்று காலை சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் நடந்தது. கோயிலுக்குகிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டம் உட் பட பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர் கள் வந்திருந்தனர்.

சாமி சிறப்பு அலங்காரத் தில் பக்தர்க ளுக்கு அருள் பாலித்தார். ஆயிரக்கணக் கான பக்தர்கள் கோவி லுக்கு வந்து சாமி தரிசனம் செய்தனர். இந்த கோயி லுக்கு கிருஷ்ணகிரி மற் றும் காவேரிப்பட்டணம் பகுதியில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட் டன. சுமார் 10 ஆயிரத்திற் கும் அதிகமான பக்தர்கள் இந்த கோயிலுக்கு நேற்று வந்து சாமி தரிசனம் செய் தனர்.

இதே போல் கிருஷ்ணகிரி காட்டு வீர ஆஞ்சநேயர் கோயிலில் உள்ள வெங்கட்ரமண சாமி கோவில், பழைய பேட்டை லட்சுமி நாராய ணசாமி கோயில், வேலம்பட்டி பெரிய மலை கோயில், ஐகொந் தம் கொத்தப்பள்ளி சீனி வாசபெருமாள் கோயில், கிருஷ்ணகிரி தம்மண்ணந கர் பெருமாள் கோயில் உள்பட அனைத்து பெரு மாள் கோவில்களிலும் புரட்டாசி மாதம் மூன்றா வது சனிக்கிழமையை முன்னிட்டு சிறப்பு பூஜை கள் நடந்தன.

புரட்டாசி மூன்றாவது சனிக்கிழமையை முன் னிட்டு கிருஷ்ணகிரி 5 ரோடு ரவுண்டானா அரு கில் மாலைகள், பூக்கள் அதிக அளவில் விற்பனை ஆனது. இதே போல மாவட்டம் முழுவதும் அனைத்து பெருமாள் கோவில்களிலும் புரட் டாசி மூன்றாவது சனிக்கி ழமையை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தன. பக்தர்கள் அதிகாலையி லேயே குளித்து பெருமாள் கோயில்களுக்கு சென்று சாமி தரிசனம் செய்தனர்.

மேலும் கனவாய்ப் பட்டி பெருமாள் கோயில் உள்பட பல கோயில்க ளில் பக்தர்கள் மொட்டை போட்டு தங்களின் நேர்த் திக்கடன் செலுத்தினர்.



# அதிக அளவிலான மீன்களுடன் கரை திரும்பிய ராமேசுவரம் மீனவர்கள்

ராமேசுவரம், அக். 9

வங்கக்கடல் மற்றும் மன் னார் வளைகுடா கடல் பகுதியில் வீசிய பலத்த சூறைக்காற்று காரணமாக கடந்த ஒரு வாரமாக மீன்பி டிக்க செல்ல மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அதிகாரிகள் தடை விதித்தி ருந்தனர்.

இதனால் சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வாழ்வா தாரம் இழந்து பாதிப்படைந்த னர். மீன்பிடி தொழிலை நம்பியுள்ளவர்களும் வேலைவாய்ப்பைஇழந்த னர்.

இந்தநிலையில் கடலில் சகஜ நிலை திரும்பியது. எனவே தடை அகற்றப்பட்ட தையடுத்து நேற்று காலை மீனவர்கள் உற்சாகத்துடன் கடலுக்கு மீன்பிடிக்க சென் றனர். குறிப்பாக ராமேசு வரம், பாம்பன், மண்டபம் உள்ளிட்ட பகுதியில் இருந்து 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க சென்று இன்று காலையில் கரை திரும்பினர்.

இதில், அதிகளவில் மீன் கள், இறால் வகைகள் பிடிபட்டதாக தெரிவித்த னர். ஒரு வாரத்திற்கு பிறகு மீன்பிடிக்க சென்ற நிலை யில் மீன்கள் அதிகளவில் கிடைத்துள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக அவர்கள் கூறினர்.

# செக்யூரிட்டி நிறுவன அதிபர் வீட்டில் 45 பவுன் கொள்ளை

உசிலம்பட்டி, அக். 9

மதுரை மாவட்டம் உசி லம்பட்டி பேரையூர் ரோட் டின் கிழக்கே உள்ள அண் ணா நகர் முதல் தெரு வில் வசித்து வருபவர் செல்வ ராஜ் (வயது 50). இவர் அதே பகுதியில் பேன்சி ஸ்டோர் வைத்து நடத்தி வருகிறார்.

இந்தநிலையில்வெளியூ ரில் நடைபெற்ற உறவினர் இல்லநிகழ்ச்சியில்கலந்து கொள்வதற்காக தனது வீட்டை பூட்டிவிட்டு குடும் பத்தினருடன் நேற்று புறப் பட்டு சென் றார். இதற்கி டையே நள் ளிரவில் அங்கு வந்த மர்ம நபர்கள் பூட்டி யிருந்த வீட் டின் பூட்டை உடைத்து நுழைய முயன்ற னர்.

அப்போது வீட்டின் வெளியே காவலுக்கு இருந்த நாய் தொடர்ந்து குரைத்தது. இத னால் அச்சம் அடைந்த அந்த மர்ம நபர்கள் நாயால் நாம் மாட் டிக்கொள்வோம் என்பதை உணர்ந்து அந்த நாய் சத்தம் போடாமல் இருக்க சரமாரியாக தாக்கி காயப்படுத்தினர்.

பின்னர் வீட்டிற்குள் நுழைந்த அவர்கள் தனி அறையில் வைக்கப்பட்டி ருந்த பீரோக்களை உடைத்து பார்த்தனர். அப்போது அங்கு நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் எதுவும் இல்லை. இதனால் ஏமாற் றம் அடைந்த கொள் ளையர்கள் ஏமாற்றத்து டன் வெளியேறினர்.

இதையடுத்து அவர்கள் பேரையூர் ரோட்டில்



மேற்கே பசும்பொன் நக ரில் உள்ள தனியார் செக்யூ ரிட்டி நிறுவனம் நடத்தும் ரவி (48) என்பவரது வீட் டிற்குள் புகுந்தனர். அந்த சமயம் ரவி போத்தம்பட்டி கிராமத்தில் உள்ள தனது தோட்டத்திற்கு குடும்பத்துடன் சென்றி ருந் தார்.

இதனை முன்கூட்டியே அறிந்து வைத்திருந்த அந்த கும்பல் வீட்டின் கதவை உடைத்து புகுந்தனர். பின் னர் பீரோவில் இருந்து 45 பவுன் நகைகளை திருடிச் சென்றனர். இன்று காலை வீடு திரும்பிய ரவி, வீட் டிற்குள் மர்ம நபர்கள் புகுந்திருப்ப தையும், நகை கள் கொள்ளை போயிருந்த தையும் அறிந்து அதிர்ச்சி அடைந்தார்.

இதுகுறித்து அவர் உசிலம்பட்டி போலீ சில் புகார் கொடுத்தார். அதன் பேரில் வழக்குப்ப திவு செய்த போலீசார், தடய வியல் நிபுணர்கள் மூலம் தடயங்களை பதிவு செய்தும், அந்த பகுதியில் பொருத்தப் பட்டுள்ள கண்காணிப்பு காமிராவில் பதிவான காட் சிகளை கொண்டும் கொள் ளையர் களை தீவிரமாக தேடி வரு கிறார்கள். இந்த துணிகர கொள்ளை சம்பவம் அப்ப குதியில் பெரும் பரபர ப்பை ஏற்ப டுத்தி உள்ளது.

# திண்டிவனம், வானூரில் மோட்டார் சைக்கிள் பிரச்சாரத்திற்கு அனுமதி மறுத்த போலீசார்: பா.ம.க.வினர் வாக்குவாதம்

விழுப்புரம், அக். 9

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் பா.ம.க.வின் சாதனை களை விளக்கி மோட்டார் சைக்கிள் பிரச்சாரம் நடத்த இன்று திட்டமிடப்பட் டது. இதற்கு விழுப்புரம் கிழக்கு மாவட்ட பா.ம.க .வினர் 100க்கும் மேற் பட்டோர் திண்டிவனம் மரக்காணம் சாலையில் மோட்டார் சைக்கிளுடன் ஒன்று திரண்டனர். தகவல் அறிந்து விரைந்து வந்த திண்டிவனம் துணை போலீஸ் சூப்பிரண்டு சுரேஷ் பாண்டியன் மற் றும் போலீசார், மோட் டார் சைக்கிள் பிரச்சாரம் நடத்த அனுமதி கிடை யாது. அனைவரும் கலைந்து செல்லுங்கள் என்று கூறினார். இதைய



டுத்து விழுப்புரம் கிழக்கு மாவட்ட பா.ம.க. செய லாளர் ஜெயராமன் தலை மையிலான நிர்வாகிகள் போலீசாருடன் வாக்குவா தத்ததில் ஈடுபட்டனர். இருந்தபோதும் போலீசார் அனுமதி மறுத்து அனைவ ரையும் கலைந்து செல்ல வலியுறுத்தினர்.

இதேபோல வானூர் மேற்கு ஒன்றிய பா.ம.க. சார்பில் மோட்டார் சைக் கிள் பிரச்சாரம் நடத்த அக் கட்சியினர் கரசானூரில் ஒன்று திரண்டனர். அங்கு வந்த வானூர் போலீசார் அனுமதி மறுத்து அனைவ ரையும் கலைந்து செல்ல வலியுறுத்தினர். பா.ம.க. வானூர் மேற்கு ஒன்றிய செயலாளர் கோபால் தலைமையிலான நிர்வாகி கள், எங்கள் கட்சியின் சாத னைகளை விளக்கி மோட் டார் சைக்கிள் பிரச்சாரம் செய்ய உள்ளோம். இதற்கு திடீரென அனுமதி மறுப் பது சரியான நடைமுறை யல்ல என்று கூறி போலீசா ருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பா.ம.க. வினரின் மோட்டார் சைக் கிள் பிரச்சா ரத்திற்கு திண் டிவனம் மற்றும் வானூரில் போலீசார் அனுமதி மறுத் தனர். மேலும், 2 இடங்க ளிலும் 100க்கும் மேற் பட்ட போலீசார் குவிக்கப்பட்ட னர்.

மோட்டார் சைக்கிள் பேரணிக்கு அனுமதி வழங்க கோரி போலீசாரி டம் பா.ம.க.வினர் வாக்கு வாதத்தில் ஈடுபட்டு வரு கின்றனர். இந்த சம்பவத்தால் திண்டிவனம், வானூர் பகு தியில் பரபரப்பு நிலவுகிறது.

# திட்டச்சேரி ஆஸ்பத்திரியில் எம்.எல்.ஏ. ஆய்வு



நாகப்பட்டினம், அக். 9

நாகை மாவட்டம் திட் டச்சேரியில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட் டப்பட்டு திறக்கப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெ றும் சிகிச்சைகள் குறித்து முகமது ஷாநவாஸ் எம் எல்ஏ ஆய்வு செய்தார்.

அப்போது ஆரம்ப சுகா தார நிலையம் திறக்கப்ப ட்டு முதல் பிரசவமாக மேலவாஞ்சூர் மெயின் ரோடு பகுதியை சேர்ந்த சிவா என்பவரின் மனைவி ரோஷி (வயது 27) என்பவ ருக்கு பிறந்த ஆண் குழந் தையை பார்வையிட்டு அவருக்கு தமிழக அரசால் வழங்கப்படும் பரிசு பெட் டகத்தை வழங்கினார். மேலும் அந்த குழந்தைக்கு தருண் என்ற பெயர் சூட்டி னார்.

பின்னர் அதைத் தொடர்ந்து திட்டச்சேரி பேரூராட்சிக்கு உட்பட்ட வெள்ளத்திடலில் இடிக்க ப்பட்ட சமுதாயக்கூடத் திற்கு ரூ.25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்தும் கட்டு மான பணி களை தொடங் கப்படாமல் இருப்பதை பார்வையிட்டு உடன் கட் டுமான பணிகளை தொடங்க நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரி களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது பேரூராட்சி மன்ற தலை வர் ஆயிஷாசி த்திக்கா, வட்டார மருத் துவ அலுவலர் மணிசுந்த ரம் ,பேரூராட்சி செயல் அலுவலர் வெங்கடே சன், பேரூராட்சி மன்ற உறுப்பினர் முகமது சுல் தான், பேரூராட்சி இள நிலை உதவியாளர் கோவிந்தராஜ், சுகாதார ஆய்வாளர் பரமநாதன் மற் றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.



# விஷால் பேச்சைக் கேட்டு தயாரிப்பாளர்கள் ஓடிவிட்டனர் காதல் சுகுமார்



ஜெகநாதன் தயாரிப்பில் முத்து வீரா இயக்கத்தில் உருவாகி வரும் படம் "டப்பாங்குத்து'. முழுக்க முழுக்க நாட்டுப்புற கலைஞர்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு இந்த படம் உருவாக்கப்பட்டுள்ளது. கதா நாயகனாக சங்கர பாண்டி மற்றும் தீப்தி துர்கா, காதல் சுகுமார் உள்பட பலர் படத்தில் நடித்துள்ளனர்.

இந்தப் படத்தின் டிரைலர் மற்றும் இசை வெளியீடு சென்னையில் நேற்று மாலை நடந்தது. விழாவில் திண்டுக்கல் லியோனி, தயாரிப்பாளர் கதிரேசன், காதல் சுகுமார் மற்றும் படக்குழுவினர் பங்கேற்றனர். விழா வில் காதல் சுகுமார் கலந்து கொண்டு பேசியதாவது:

நாட்டுப்புறகலைஞர்கள்வாழ்க்கையைமையப்படுத்திதயாரிக்கப்பட்டுள்ளஇந்தபடத்தில்நான்கோமாளி கதாபாத்திரத்தில்நடித்துள்ளேன். படத்தில் 15 நாட்டுப்புற பாடல்கள் உள்ளன. கொரோனா காலகட்டத்தில் அதிகமாக பாதிக்கப்பட்டது கலைஞர்கள் தான். கடைசியாக கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதும் திரை துறைக்கு தான்.

இதனால் சினிமா துறையை சேர்ந்த பல கலைஞர்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கினர். நானே வீட்டில் ரேசன் அரிசியை சமைத்து சாப்பிடும் சூழ்நிலைக்கு வந்தேன். இந்த நிலையில் தயாரிப்பாளர் ஜெக நாதன் இந்த படத்திற்கு என்னை ஒப்பந்தம் செய்தார். அது மிகப்பெரிய ஆறுதலாக அமைந்தது. சிறு பட்ஜெட் படங்கள் தான் என்னை போன்ற கலைஞர்களை வாழ வைக்கிறது. எனவே சிறு பட்ஜெட் தயாரிப்பாளர்களை ஊக்குவிக்க வேண்டும். சமீபத்தில் விஷால் பேசிய போது ரூ. 3 கோடி ரூ.4 கோடி வைத்துக்கொண்டு படம் எடுக்க வராதீர்கள். அப்படி எடுக்கும் படங்கள் வெளியே வருவதில்லை என பேசினார். திமிரு படம் வெற் றிக்கு பிறகு பல ஆண்டுகள் கழித்து 'மார்க் ஆண்டனி' படம் இப்போது வெற்றி பெற்றுள்ளது. அதனால் திமிராக விஷால் பேசியுள்ளார்.

விஷால் பேச்சைக் கேட்டு படம் எடுப்பதற்கு காத்திருந்த தயாரிப்பாளர்கள் ஐந்து பேர் பயந்து போய் எனக்கு தெரிந்து படம் எடுக்காமல் திரும்பி சென்று விட்டனர்.

எனவே படம் எடுக்க வருபவர்களை ஊக்குவிக்காமல் படம் எடுக்க வரவேண்டாம் என்று விஷால் பேசுவது தவறு.

இவ்வாறு அவர் பேசினார்.

# மீண்டும் விஜய் ஆண்டனி இசை நிகழ்ச்சி



சில மாதங்களுக்கு முன்பு விஜய் ஆண்டனி சென்னையில் நடத்திய இசை நிகழ்ச்சி பெரிய வரவேற்பை பெற் றது.

சமீபகாலமாக சினிமா இசையமைப்பாளர்கள் தொடர்ந்து இசை நிகழ்ச்சி நடத்தி வருகின்றனர்.

நடிகரும் இசையமைப்பாளருமான விஜய் ஆண்டனி பல முன்னணி நடிகர்களின் படங்களுக்கு இசை அமைத் துள்ளார். பிச்சைக்காரன், சலீம், சைத்தான், கொலை, ரத்தம் உள்பட பல படங்களில் நடித்து இருக்கிறார். இந்த படங்கள் அனைத்தும் ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது. பிச்சைக்காரன்2 படத்தை அவரே இயக்கி நடித் திருந்தார். தொடர்ந்து படங்களில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில் சில மாதங்களுக்கு முன்பு விஜய் ஆண்டனி சென்னையில் நடத்திய இசை நிகழ்ச்சி பெரிய வரவேற்பை பெற்றது. இதை தொடர்ந்து மீண்டும் ஒரு பிரமாண்ட இசை நிகழ்ச்சியை விஜய் ஆண்டனி நடத்த இருக்கிறார். நிகழ்ச்சி நடைபெறும் இடம், தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது.

சமீபகாலமாக சினிமா இசையமைப்பாளர்கள் தொடர்ந்து இசை நிகழ்ச்சி நடத்தி வருகின்றனர். கடந்த மாதம் ஏ.ஆர்.ரகுமான் நடத்தினார். இந்த மாதம் ஹாரிஸ் ஜெயராஜ் இசை நிகழ்ச்சி நடத்த உள்ளார். அனிருத், யுவன்சங்கர் ராஜா, வித்யாசாகர், தேவா ஆகியோர் தொடர்ந்து இசை நிகழ்ச்சி நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.



# டைகர் 3 டிரெய்லரை வெளியிடும் சல்மான் கான்

டிரைலர் மற்றும் திரைப்படத்தில் எதிர்பாராததை எதிர்பாருங்கள். படப்பிடிப்பில் சண்டைக்காட்சிகளை பார்க் கும் போது ஒரு குழந்தையாக மாறி விட்டேன்.

இந்தி நடிகர் சல்மான் கான் நடிப்பில் 'டைகர்3' படம் உருவாகி உள்ளது. இதன் டிரெய்லரை சல்மான் கான் வருகிற 16ந் தேதி வெளியிட உள்ளார். யஷ்ராஜ் பிலிம்சின் ஸ்பை திரில்லராக உருவாகியுள்ள 'டைகர் 3' படம் தீபாவளிக்கு வெளியாக இருக்கிறது.

படம் குறித்து சல்மான் கான் கூறும்போது, "யஷ்ராஜ் பிலிம்சில் உருவான ஏக்தா டைகர், டைகர் ஜிந்தா ஹை ஆகிய ஸ்பை யுனிவர்ஸ் படங்களை மக்கள் பார்த்திருக்கிறார்கள். அதனால் அவர்களின் பார்வைக்கு விருந்தாக புதிதாக, தனித்துவமான ஆச்சர்யமான சிலவற்றை கொடுக்க வேண்டியது முக்கியமானதாக இருந்தது. டைகர் 3 படக்குழுவினர் உண்மையிலேயே ஆக்சன் தொகுப்பாக இதை உருவாக்கியுள்ளனர். அது கண்கவரும் விதமாக உள்ளது. டிரைலர் மற்றும் திரைப்படத்தில் எதிர்பாராததை எதிர்பாருங்கள்.

படப்பிடிப்பில் சண்டைக்காட்சிகளை பார்க்கும் போது ஒரு குழந்தையாக மாறி விட்டேன். இந்திய சினிமாவில் இதுவரை பார்த்திராத விஷயங்கள் படத்தில் உள் ளது" என்றார்.

# 13வது உலக கோப்பை கிரிக்கெட் போட்டி



13வது உலக கோப்பை கிரிக்கெட் போட்டி (50 ஓவர்) இந்தியாவின் 10 நகரங்களில் நடந்து வருகிறது.

இந்நிலையில், சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் இன்று 5வது லீக் ஆட்டத்தில் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் இந்தியஅணி, 5முறைசாம்பியனானஆஸ்திரேலியாவை எதிர்கொண்டு வருகிறது.

இந்தப் போட்டிக்கான டாஸ் சுண்டப்பட்டது. டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, ஆஸ்திரேலிய அணி முதலில் களமிறங்கியது.

இதில், அலெக்ஸ் கேரி ரன் எடுக்காமல் அவுட்டானார். இந்திய அணி வீரர்களான ரவீந்திர ஜடேஜா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பும்ரா மற்றும் குல்தீப் யாதவ் தலா 2 விக்கெட்டுகளும், முகமது சிராஜ், ஹர்திக் பாண்டியா மற்றும் அஷ்வின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

ஆரம்பத்தில் நிதானமாக விளையாடிய ஆஸ்திரேலிய அணி பின்னர் இந்திய அணி வீரர்களின் பந்துவீச்சால் தடுமாறியது. இதில், 49.3 ஓவர் முடிவில் அனைத்து விக்கெட் இழப்பிற்கு 199 ரன்கள் மட்டுமே ஆஸ்திரேலிய அணியால் எடுக்க முடிந்தது. இதைதொடர்ந்து, 200 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி வீரர்கள் விராட் கோலி 85 ரன்களும், லோகேஷ் ராகுல் 97 ரன்களும், ஹர்திக் பாண்ட்யா 11 ரன்களும் எடுத்தனர். இந்நிலையில் இந்தியா அணி 41.2 ஓவருக்கு 3 விக்கெட்டுகளை இழந்து 201 ரன்களை எடுத்து அபாரமாக வெற்றிப்பெற்றது.

# ஆஸிஇந்தியா இடையிலான 150வது ஒருநாள் ஆட்டம்: சேப்பாக்கத்தில் நடந்தது



★ ஆஸிஇந்தியா இடையிலான 150வது ஒருநாள் ஆட்டம் இது

★உலககோப்பைக்கானஇந்தியஅணியின் மூத்த கேப்டன் என்ற பெருமையை ரோகித் சர்மா (36 வயது, 161 நாள்) பெற்றுள்ளார். அவருக்கு அடுத்த இடங்களில் அசாருதீன் (36 வயது,124 நாள்),ராகுல் திராவிட்(34 வயது, 71 நாள்),வெங்கட்ராகவன் (34 வயது, 56 நாள்), தோனி (33 ஆண்டு, 262 நாள்) ஆகியோர் உள்ளனர்.

★ 31வது ஓவரை தமிழ்நாட்டு மருமகன் பும்ரா வீச, தமிழ்நாட்டின் இன்னொரு மருமகன் மேக்ஸ்வெல் எதிர்கொண்டார். தமிழகத்தை பூர்வீகமாக கொண்ட சஞ்சனா கணேசனை பும்ராவும், வினி ராமனை மேக்ஸ்வெல்லும் திருமணம் செய்துள்ளனர்.

★ ஆட்டத்தை பார்க்க ஹர்பஜன் சிங், கவுதம் கம்பீர், ஸ்ரீகாந்த், சடகோபன் ரமேஷ், பிசிசிஐ செயலாளர் ஜெய் ஷா வந்திருந்தனர்.

★ ஆடும் அணியில் வாய்ப்பு கிடைக்காத சூர்யகுமார், களத்தில் ஷ்ரேயாஸ் அய்யருக்கு பதிலாக பீல்டிங் செய்தார். கடைசி ஓவர்களில் ஷ்ரேயாஸ் உள்ளே வந்து ஃபீல்டிங்கில் ஈடுபட்டார்.

★உலககோப்பை ஆட்டங்களில் குறைந்த இன்னிங்சில் விரைவாக 1000 ரன் எடுத்த வீரர் என்ற பெருமையை வார்னர் (19 இன்னிங்ஸ்) பெற்றார். இதற்கு முன் சச்சின், டி வில்லியர்ஸ் 20வது இன்னிங்சிலும், ரிச்சர்ட்ஸ், கங்குலி 21 இன்னிங்சிலும் இந்த இலக்கை எட்டினர்.

★ உலக கோப்பையில் ஆஸி.க்காக 1000 ரன் கடந்த 4வது வீரர் என்ற பெருமை வார்னருக்கு கிடைத்துள்ளது. முதல் 3 இடங்களில் பான்டிங் (1743), கில்கிறிஸ்ட் (1085), மார்க் வாஹ் (1004) உள்ளனர்.

★ உலக கோப்பையில் தாங்கள் சந்தித்த முதல் பந்திலேயே கோல்டன் டக் அவுட் ஆனவர்கள் பட்டியலில் இஷான், ஷ்ரேயாஸ் இணைந்துள்ளனர்.

★ உலக கோப்பையில் தொடக்க ஆட்டக்காரர்கள் இப்படி டக் அவுட் ஆவது இது 7வது முறை.

★ ஒருநாள் போட்டியில் இந்தியாவின் 3 முன்வரிசை பேட்ஸ்மேன்கள் டக் அவுட் ஆவது இதுவே முதல் முறை.

★ ஆஸி. வேகம் ஸ்டார்க் உலக கோப்பையில் தனது 50வது விக்கெட்டாக இஷான் கிஷனை வீழ்த்தினார்.

# உலகக்கோப்பை கிரிக்கெட்: ஆஸ்திரேலியாவை வீழ்த்தி இந்தியா அபார வெற்றி



13வது உலக கோப்பை கிரிக்கெட் போட்டி (50 ஓவர்) இந்தியாவின் 10 நகரங்களில் நடந்து வருகிறது.

இந்நிலையில், சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் இன்று 5வது லீக் ஆட்டத்தில் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் இந்திய அணி, 5 முறை சாம்பியனான ஆஸ்திரேலியாவை எதிர்கொண்டு வருகிறது.

இந்தப்போட்டிக்கானடாஸ்சுண்டப்பட்டது. டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, ஆஸ்திரேலிய அணி முதலில் களமிறங்கியது.

இதில், அலெக்ஸ் கேரி ரன் எடுக்காமல் அவுட்டானார். இந்திய அணி வீரர்களான ரவீந்திர ஜடேஜா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பும்ரா மற்றும் குல்தீப் யாதவ் தலா 2 விக்கெட்டுகளும், முகமது சிராஜ், ஹர்திக் பாண்டியா மற்றும் அஷ்வின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

ஆரம்பத்தில் நிதானமாக விளையாடிய ஆஸ்திரேலிய அணி பின்னர் இந்திய அணி வீரர்களின் பந்துவீச்சால் தடுமாறியது.

இதில், 49.3 ஓவர் முடிவில் அனைத்து விக்கெட் இழப்பிற்கு 199 ரன்கள் மட்டுமே ஆஸ்திரேலிய அணியால் எடுக்க முடிந்தது.

இதைதொடர்ந்து, 200 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி வீரர்கள் விராட் கோலி 85 ரன்களும், லோகேஷ் ராகுல் 97 ரன்களும், ஹர்திக் பாண்ட்யா 11 ரன்களும் எடுத்தனர்.

இந்நிலையில் இந்தியா அணி 41.2 ஓவருக்கு 3 விக்கெட்டுகளை இழந்து 201 ரன்களை எடுத்து அபாரமாக வெற்றிப்பெற்றது.



# உலகக்கோப்பை போட்டி 199 ரன்களில் சுருண்டது ஆஸ்திரேலியா

13வது உலக கோப்பை கிரிக்கெட் போட்டி (50 ஓவர்) இந்தியாவின் 10 நகரங்களில் நடந்து வருகிறது.

இந்நிலையில், சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் இன்று 5வது லீக் ஆட்டத்தில் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் இந்திய அணி, 5 முறை சாம்பியனானஆஸ்திரேலியாவைஎதிர்கொண்டு வருகிறது.

இந்தப் போட்டிக்கான டாஸ் சுண்டப்பட்டது. டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, ஆஸ்திரேலிய அணி முதலில் களமிறங்கியது.

இதில், அலெக்ஸ் கேரி ரன் எடுக்காமல் அவுட்டானார். இந்திய அணி வீரர்களான ரவீந்திர ஜடேஜா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பும்ரா மற்றும் குல்தீப் யாதவ் தலா 2 விக்கெட்டுகளும், முகமது சிராஜ், ஹர்திக் பாண்டியா மற்றும் அஷ்வின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

ஆரம்பத்தில் நிதானமாக விளையாடிய ஆஸ்திரேலிய அணி பின்னர் இந்திய அணி வீரர்களின் பந்துவீச்சால் தடுமாறியது.

இதில், 49.3 ஓவர் முடிவில் அனைத்து விக்கெட் இழப்பிற்கு 199 ரன்கள் மட்டுமே ஆஸ்திரேலிய அணியால் எடுக்க முடிந்தது.

இதைதொடர்ந்து, 200 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்குகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.